செ.கு. எண்: 37

நாள்: 24/1/2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 24.1.2012

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், சித்திரப்பட்டி கரடிப்பள்ளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சந்திரன் என்பவரது மகன்கள் சிறுவன் குணாநிதி மற்றும் சிறுவன் சோமநாதன் ஆகிய இருவரும் **21.1.2012** அன்று சித்திரப்பட்டிக்கு வடக்கே உள்ள ஏரியில் மீன் பிடிக்கச் சென்ற போது, எதிர்பாராத விதமாக ஏரியில் தவறி விழுந்து, நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த சிறுவர்கள் குணாநிதி மற்றும் சோமநாதன் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் குணாநிதி மற்றும் சோமநாதன் ஆகிய இரு மகன்களை இழந்து வாடும் அவர்களுடைய குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9